பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமூர்த்த புடவைகளை சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3/50

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை நவீன டிசைன்களில் மனம் போல் பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை, யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஆு மாசி மீ 09 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 24 (21 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 15

## ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண

# ஈ.பி.ஆர்.எல்.எவ். புதிய யோசனை; சனியன்று கலைஞரிடம் சமர்ப்பிப்பு

## நால்வர் குழு சென்னை செல்லும்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 21

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக புதிய யோசனை ஒன்றை ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் தயாரித்திருக்கிறது. ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியிடம் இந்த யோசனை சமர்ப்பிக்கப் படும்.

இந்த யோசனையை நேரடியாகச் சமர்ப்பிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சர் ஒருவர் தலைமையில் ஈ. பி. ஆர். எல். எவ் வின் நால்வர் குழு ஒன்று சென்னை செல்லும். இந்தக் குழுவினர் அனேகமாக எதிர்வரும் சனிக்கிழமையன்று தமது யோசனைகளடங்கிய தஸ்தாவேஜுக்களை கலைஞரிடம் சமர்ப்பிப்பர் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ்வின் அரசியல் ஆலோசனைக் குழு வின் கூட்டம் நேற்று அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கடந்த சனி இரவும் ஞாயிறு காலையும் தமிழக முதல்வர் மு. கருணாநிதியுடன் ஈ. பி. ஆர். எல்.எவ். சென்னைப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்கள் குறித்து விரிவாக ஆராயப் பட்டன.

கூட்ட முடிவில் புதிய யோசனை ஒன்று தயாரிக்கப் பட்டது.

சென்னைக்குச் சென்று கலைஞரிடம் நேரடியாக இந்த யோசனையைச் சமர்ப்

(5ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரிகளும் திரும்பினர்

இலங்கைத் தமிழர் அமைப்புக்களுடன் கலைஞர் கருணாநிதி பேச்சுக்கள் நடத்திய போது கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகளும் சென்னையில் தங்கியிருந்தனர் என்று தெரியவருகிறது.

ஈழத் தமிழ்க் குழுக்களுடன் கலைஞர் ஒரு சுற்றுப்பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொண்டதை அடுத்து அந்த நான்கு அதிகாரிகளும் கொழும்பு திரும்பினர். (உ-எ)

## 38ஆக அதிகரிப்பு

சென்னை, பெப். 21

தமிழ்நாட்டில் பண்ருட்டி அருகே விஷ சாராயம் அருந்தியதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்தது. (ஒ எ)

## 'கறுப்புப் பூனைகள்' இயக்குநர்; கல்கத்துக்கு புதிய பதவி!

இலங்கையில் இருந்து வெளியேறிக்கொண்டு இருக்கும் இந்திய அமைதிப்படையின் தளபதி ஜெனரல் ஏ. எஸ். கல்கத்துக்குப் புதிய பதவி வழங்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறியதும் அதற்கு என சென்னையில் திறக்கப்பட்டிருந்த விசேட தலைமையகம் மூடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கறுப்புப் பூனைகள் என்று அழைக்கப்படும் தேசியப்பாதுகாப்புப்படையின் டைரக்டர் ஜெனரலாக அவரை நியமிக்கலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறது.

இப் படையின் டைரக்டர் ஜெனரலாக இருந்த திரு. லோத்மர்லா என்பவர் தற்சமயம் ஜம்மு – காஷ்மீர் ஆளுநரின் ஆலோசகராக இருந்து வருகிறார்.

கல்கத்தின் சொந்தப் பாதுகாப்புக் கருதியே அவரை புதுடில்லியில் உயர்பதவி ஒன்றில் நியமிக்கவேண்டும் என்று இராணுவத் தலைமையகம் வலியுறுத்தி வருவதாகத் தெரிகிறது. (உ எ)

## மாகாணசபைக் கலைப்பை 'புளொட்' எதிர்க்காது!

கொழும்பு, பெப். 21

வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதை புளொட் இயக்கம் எதிர்க்காது.

புளொட் பேச்சாளர் கரவை கந்தசாமி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

புதிய தேர்தலை நடத்துவதற்கு முன்னர் சகல குழுக்களிடமிருந்தும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதில் எமது இயக்கம் தெளிவாக உள்ளது.

வழமையான அரசு இயந்திரத்தின் கீழ் சட்டம், ஒழுங்கு, பராமரிப்பு கொண்டுவரப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அல்லாத ஏனைய தமிழர் அமைப்புக்களுடன் நடத்தப்பட்ட இரண்டு சுற்றுப் பேச்சுக்களிலும் முதலமைச்சர் கருணாநிதி பக்கச் சார்பற்ற நிலைப்பாட்டையே எடுத்துக்கொண்டார் என்று நான் அறிந்துகொண்டேன்.

—இப்படி கரவை கந்தசாமி சொன்னார். (உ-எ)

## முச்சந்தி முரளி



எப்படியும், ஆள்மாறி ஆள் நின்று, தமிழ்ப் பகுதியை ராணுவப் பிரதேசமாக்கிறது எண்டு தான் நிக்கினம் பின்னை . . . !

# பிரேமா - மாத்தயா நாளை சந்திப்பு!

## கொழும்பில் நடைபெறும் எனத் தகவல்

கொழும்பு, பெப்ரவரி 21

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவருமான திரு. கோ. மகேந்திரராஜா [மாத்தயா] நாளை வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவை சந்தித்துப் பேசுவார்.

கொழும்பில் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி ஆகியோரும் உடனிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ் பகுதிகளிலிருந்து இந்தியப்படை வெளியேறிய பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து நட்புறவு நிலை பேணப்படுவதை உறுதி செய்வது குறித்தும்—

சமாதான, சகஜ நிலையை நிலை நிறுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், இந்தச் சந்திப்பின் போது ஆராய்ந்து முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர், ஸ்ரீலங்கா ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவது ஈழத் தமிழர் பிரச்சினையில் ஒரு முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ)

## மூதூரில் இந்தியப்படை முற்றாக வாபஸ்

திருகோணமலை, பெப். 21

மூதூர் பிரதேசத்திலிருந்து இந்தியப்படையினர் முற்றாக விலகிவிட்டனர்.

இப்போது மூதூர் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மூதூர் இறங்குதுறை வரை விடுதலைப் புலிகள் நடமாடுகின்றனர். (இ-159)

## இருவர் கொலை

கொழும்பு, பெப். 21

கலேவலையில் ஜே.வி. பி. யினரால் சகோதரர் இருவர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர். (உ)

## மொனறாகலையில் மோதல்

கொழும்பு, பெப். 21

மொனறாகலையில் கடந்த திங்களன்று மாலையில் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை படையினர் சோதனையிட முற்பட்டவேளயில் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர். (உ)

## மாகாணசபை முதலாம் திகதி கூடும்

திருகோணமலை, பெப். 21

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலையில் நடைபெறும். மாகாணசபை அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட குறிப்பு ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சுபநேரம்

21 — 02 — 1990

புதன்கிழமை மாசி 9

சுபநேரம்:
5 . 01 முதல் 6 . 31 வரை
ராகுகாலம்:
12 . 31 முதல் 2 . 01 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## கலைஞர் பாரபட்சமாக நடக்கின்றாரா?

# வரதராஜப்பெருமாளின் கூற்றுக்கு மதுரையில் கருணாநிதி பதில்!

மதுரை, பெப். 21

இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் விஷயத்தில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி பக்கச் சார்பின்றி மூத்த சகோதரர் போன்று நடந்து கொள்ள வேண்டும் என்று வடக்கு- கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் கூறியிருந்தார் அல்லவா!

அதற்கு திரு. கருணாநிதி மதுரையில் நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் பதிலளித்தார்.

அப்போது திரு. கருணாநிதி சொன்னதாவது;

நான் பக்கச் சார்பாக நடக்கவில்லை.

எல்லாத் தமிழ்ப் போராளி அமைப்புக்களையும் நான் சமமாகவே கருதுகின்றேன். அவர்களுடன் நான் பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை.

சென்னையில் சகல தமிழர் அமைப்புக்களுடன் நான் பேச்சுக்கள் நடத்தினேன்.

திருகோணமலையைத் தவிர ஏனைய தமிழர் பகுதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடிலும் செல்வாக்கிலும் இருப்பதாக அப்பேச்சுக்களின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திருச்சி தி. மு. க. மாநில மாநாட்டில் நான் சொன்ன

(5ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் மேலும் 3 முகாம்கள் மூடப்பட்டன

- பருத்தித்துறை செய்தியாளர்;- பா. ரகுநாதன்

வடமராட்சியில் உள்ள மேலும் மூன்று முகாம்களில் இருந்து இந்திய அமைதிப் படையினர் நேற்று வாபஸ் பெற்றனர்.

மந்திகை, நெல்லியடி, கலிகை ஆகிய இடங்களில் இருந்த முகாம்களே நேற்று மூடப்பட்டன.

இந்த மூன்று முகாம்களையும் சேர்ந்த படையினர் யாக்கரு முகாமைச் சென்றடைந்துள்ளனர்.

தற்போது யாக்கரு, மண்டான், நவிண்டில், உடுப்பிட்டி, வல்லைச் சந்தி ஆகிய இடங்களிலேயே முகாம்கள் உள்ளன. (இ-118)

## தடுப்பு முகாம் இளைஞர்களை விடுவிப்பதில் சிக்கல் நிலை!

### காவலிலுள்ளோர் சான்றிதழில் கையொப்பமிட மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

இந்தியப் படையின் காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதில் சிக்கல் நிலை தோன்றியிருக்கிறது.

விடுவிப்புத் தொடர்பான சான்றிதழில் கையெழுத்திடுவதற்கு தடுப்பு முகாமில் உள்ள இளைஞர்கள் மறுத்து வருவதே இதற்குக் காரணமாகும்.

உண்மைக்குப் புறம்பான விடயத்துக்கு ஒப்புதல் அளிக்கும்படி கோரப்பட்டதாலேயே தாங்கள் கையெழுத்திட மறுப்பதாக அந்த இளைஞர்கள் இந்தியப்படை அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் எழுநூற்றைம்பது தமிழ் இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக விடுவிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இதுவரை சுமார் ஐநூறு பேர்வரை விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் இருநூற்றைம்பது பேர் வரை விடுதலைக்காகக் காத்திருப்பதாகவும் தெரிய வந்தது.

காங்கேசன் தடுப்பு முகாமில் உள்ளோர் வடமராட்சியிலுள்ள ஏதேனும் ஒரு படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வல்வெட்டித்

(5ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை விலகி வரும்

# வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெருமளவு ஸ்ரீலங்கா படையினர்!

கொழும்பு, பெப். 21

இந்தியப்படை விலகிவரும் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு ஸ்ரீலங்காத் துருப்புகள் பெருமளவில் அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

கொழும்பில் பாதுகாப்புப் படை வட்டாரங்களும் இத் தகவலை நேற்று ஊர்ஜிதம் செய்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி, கும்புறுமூலை, கரடியனாறு, புல்லுமலை, களுவாஞ்சிக்குடி, மங்கள ஓயா, மட்டக்களப்பு நகர் ஆகிய இடங்களுக்கும்—

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைப் பகுதிக்கும்—

யாழ். மாவட்டத்தில் பலாலிக்கும் மேலதிக படையினர் அனுப்பப் பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

பலாலியில் அமைதிப்படையினர் விலகுவதற்கு ஆயத்தமாகும் இடங்களில் ஸ்ரீலங்காப் படையினரை நிலைகொள்ளச் செய்யும் முயற்சியில் படை அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பலாலி பயிற்சிக் கலாசாலை கட்டடம் உட்பட விமான நிலையச் சூழலில் உள்ள பல கட்டடங்களில் தற்போது இந்தியப்படையினர் நிலை கொண்டுள்ளனர்.

இவர்கள் அடுத்த மாதம்

(5-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வும்; Mr. S. Thivagarajah Kothukadv Road, Navaly South, Manipay மேலும் விபரங்களுக்கு; 144, Kannathiddy Road, Jaffna.

Brand New (Eastern) புதியது! சகல உதிரிப் பாகங்களுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: Mr S. Sivselvanathan, 47, Temple Road, Jaffna (2589)

J.V.C. 70E வீடியோ கமெரா W.V.P 100 வீடியோ கமெரா N.V 100 Portable வீடியோ டெக் என்பன விற்பனைக்கு உண்டு. வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை. (2587)

நயினாதீவு 4ஆம் வட்டாரம் டற்கரை வீதியில் கன்னியந்கோட்டம் பனைகளுடன் 10½ பரப்பு விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். சடிதத் தொடர்: இரத்தினம், 9. இரத்தினம் அவனியூ, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (2405)

## சமூகக்கல்வி

வெளிவந்துள்ளது! விற்பனையாகின்றது!!, சமூகக் கல்வி ஆண்டு 11 (திருத்திய புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்: ந. தர்மபாலன், சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (2576)

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

அடை வைத்துப் பொரித்த கோழிக்குஞ்சு களோடு சேர்த்து விடக்கூடிய குஞ்சுகள் எம்மிடம் புதன், வியாழக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். இல. 9. சுந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [11820]

(Unsex தனிசிகப்பு, கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்) கறுப்பு வரிசேவல் (Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (21-02-90) புதன்கிழமை விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க: இல-9 சுந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (11819)

## தேவை

வட மாகாணத்தில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையத்திற்கு வேலை செய்யும் ஊழியர்கள் தேவை. 20 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும். கவர்ச்சியான சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: இல. 624, C/o உதயன். C/3887

முகிதீன் ஜீம்மா பள்ளிவாசலுக்கு குர்ஆன் மதுரஸா ஐவேளை தொழுகை ஜீம்மா நடத்தக்கூடிய மௌலவி தேவை. வயது, தகைமை, எதிர்பார்க்கும் சம்பளம் என்பவற்றுடன் 28-02-1990 க்கு முன்னதாக தலைவர் [முகிதீன் ஜீம்மா பள்ளி] 100 மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். [11829]

## பெண் நெசவாளர் தேவை

மின்தறி நெசவாலைக்கு அனுபவம் மிக்க பெண் நெசவாளர் உடன் தேவை. 25-2-90 காலை 10. 00 மணிக்கு நேரில் சமூகம் கொடுக்கவும். மின்தறி நிலையம், T.C. ஒழுங்கை, சங்கானை. [2598]

## படவரைஞர் தேவை

மேற்படி பாட நெறியை முடித்தவர்கள் கட்டிட வரைதற் பயிற்சி பெற விரும்பின் சுய விபரத்துடன், யாழ் நகருக்குஅண்மையிலுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். [அனுபவம் இருந்தால் குறிப்பிடவும்]. No – 625, C/o உதயன். (2600)

## பிறந்தநாள் வாழ்த்து

21-02-90இல் செல்வன் அகிலன், சுழிபுரம் பிரதான வீதியைச் சேர்ந்த பாலசிங்கம் சுந்தரராணி தம்பதிகளின் மகன் அகிலன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார். (11821)

## போட்டோஸ்ரற்

தங்கள் சகல பத்திரங்களையும் மிகவும் தெளிவான முறையில் போட்டோஸ்ரற் செய்து கொள்ளவும், ஆங்கிலத் தட்டெழுத்து செய்து கொள்ளவும் வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை. (2588)

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம் (C/3717

## புலமைப் பரிசில் பரீட்சை 5ஆம் ஆண்டு

5ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 23-02-90 வெள்ளி மு-ப 8. 30 - 10. 30 மணிக்கு நடைபெறும். புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதன் 3. 30 சனி, ஞாயிறு 10. 30 மணி. ஒரு சில வெற்றிடங்களே உள்ளன. புதிய கல்வி நிலையம், (கங்காதரன் ஆஸ்பத்திரியடி) யாழ்ப்பாணம். (1992)

## தவறிவிட்டது

நீர்வேலிசந்தியில் வசிப்பவராகியவா. பரமநாதன் அடையாள அட்டை இல: 431112027X இ. போச 000537 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேல்தரப்பட்ட முகவரிக்கு கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11854)

## புத்தகம்

சித்திரக் கதைகள் (காமிக்ஸ்) முத்து லயன் - திகில் வெளியீடுகளும் மீண்டும் இந்திய சகல சஞ்சிகைகளும் வந்து விற்பனையாகின்றது. பொக்கற் கலண்டர்களும் கிடைக்கும் ராஜன் புத்தகசாலை 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (2596)

## ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 21-02-1990 திங்கள், புதன், வெள்ளி நாட்களில் மாலை 4மணி — 5/30 மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (11803)

## TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3828)

## புதிய அரசியல் பொறுப்பாளர்

கிளிநொச்சி,, பெப் 21 கிளிநொச்சிமாவட்ட தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக புதிதாக திரு. கோபி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தற்போது கிராமங்கள் தோறும் சென்று மக்களை சந்தித்துவருகின்றார். (இ-76)

## யாழ் மக்கள் வங்கியில் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், பெப் 21 யாழ்ப்பாணம் மக்கள்வங்கியில் உதவிப் பிரதேச முகாமையாளர்களாக கடமையாற்றிய இருவர் உதவிப் பிரதேச முகாமையாளர் தரம் ஒன்றுக்கு 15 ஆம் திகதி முதல் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. ஆர். சிவசிதம்பரம், திரு. கே. திருநாவுக்கரசு ஆகிய இருவருமே மக்கள் வங்கியின் தலைமைப் பீடத்தினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ-10)

## மக்கள் வங்கியில் வாடிக்கையாளர் தினம்


யாழ்ப்பாணம், பெப். 21 இம்மாதம் 28-ஆம் திகதியை மக்கள்வங்கி வாடிக்கையாளர் நலன் சேவை தினம் ஆக இலங்கை பூராவும் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக வடமகாணத்தில் உள்ள எல்லா மக்கள் வங்கிக் கிளைகளும் 28-ஆம் திகதி பிற்பகல் 1. 30 மணி தொடக்கம் 5. 30 மணி வரை திறந்து இருக்கும்.

அன்றைய தினத்தில் வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுடைய தீர்க்கப்படாத விடயங்கள் அவர்களுக்குத் தேவையான தகவல்கள் ஆகியவை குறித்து வங்கி முகாமையாளரும் பிராந்திய தலைமைக் காரியாலய உயர் அதிகாரிகளும் வாடிக்கையாளர்களுடன் கலந்து பேசுவார்கள்.

இதன் பின்பு ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் மேற்படி சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் என யாழ். மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-10)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கோபால்செட்டி கிருஷ்ணசாமி

தோற்றம்: 14 - 07 - 1912

மறைவு: 04 - 03 - 1989

குடும்பத்தின் ஒளிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே! கருணையின் பெருங்கடலே! எம்மையெல்லாம் உயர வைத்த உத்தமரே! நீங்கள் அரங்கன் திருவடி சேர்ந்து ஆண்டு ஒன்றானாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு ஒரு போதும் அகலா! உங்கள் ஆத்மசாந்திக்காக திரு அரங்கப் பெருமானை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

69 B, மணிக்கூட்டு, வீதி,
யாழ்ப்பாணம். (11830)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. சாமிநாதன் டானியல் சீயூஸ்

[வொட்சன்]

(கில்மன் தும்புத் தொழிற்சாலை உதவியாளர்)

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி அன்னைவேளாங்கண்ணி ஆலயத்தில் 21 - 2 - 90 காலை 7 மணிக்கு நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு இவரின் ஆத்மாசாந்தி அடைய வேண்டுமாறு அழைக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், தந்தை, தாய்,
சகோதரி, சகோதரர்கள், அத்தான்,
அண்ணிமார், மச்சான்மார்.

கில்மன்ஸ்,
53, எழில்ஊர் (துண்டி)
மணிப்புரி, யாழ்ப்பாணம். [2604]

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரபாலினி பாலசுப்பிரமணியம்

(வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர விஞ்ஞான வகுப்பு-மாணவி)

தோற்றம்: 15- 10- 1963

மறைவு: 20- 02- 1983

நீ பிரிந்து ஏழாண்டுகள் ஆனாலும்
உனை நினைத்து ஓயாதுள்ளம்
ஏங்கித் தவிக்குதம்மா!

கல்லூரி வீதி,
[illegible]

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

(2601)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

வடபகுதியில் பிரபல்யமான நிறுவனமொன்றில் பின்வரும் வேலைவாய்ப்புகள் உள்ளன. தகுதியும் ஆர்வமும் உடையோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

1. **எழுதுவினைஞர்**
   க. பொ. த. (உ/த) சித்தியடைந்த 25ந்து வயதுக்குட்பட்ட, யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் ஆண்கள் விரும்பத்தக்கது.
2. **விவசாய உதவியாளர்**
   க. பொ. த. (உ/த) தாவரவியல் பிரிவில் சித்தியடைந்த 25 வயதுக்குட்பட்ட பருத்தித்துறை, பளை, சாவகச்சேரி பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.
3. **பத்திரிகையாளர் [பயிலுனர்]**
   க. பொ. த. (உ/த) சித்தியடைந்த பத்திரிகைத் துறையில் ஆர்வமுடைய இளைஞர்கள் விரும்பத்தக்கது.
4. **பத்திரிகைச் செய்தியாளர்**
   க. பொ. த. (உ/த) சித்தியடைந்த பத்திரிகைத் துறையில் ஆர்வமுடைய கொழும்பில் வசிப்போர் விரும்பத்தக்கது.

● கையினால் எழுதப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 22-2-90ம் திகதிக்கிடையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டிய முகவரி:

**Arun Marketing & Advertising**
15, 2nd Lane,
Power House Road,
JAFFNA

[சி-3375]

## அந்தியேட்டி அழைப்பு

26 - 1 - 90 ல் தனது 85 ஆவது வயதில்சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் முருகேசு சின்னத்தம்பி**
(இளைப்பாறிய அதிபர் யா/வீரசிங்கம் மகாவித்தியாலயம் மீசாலை)

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் எதிர்வரும் (25 – 02 - 1990) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் றோட்,
மீசாலை. (சி/3889)

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 28 - 06 - 1929

★●★●★

உதிர்வு: 21 - 01 - 1990

### திருமதி திரேஸ் பெஞ்சமின்

(ஈச்சமோட்டையைச் சேர்ந்த பிரபல ஆங்கில ஆசிரியர் திரு. ச. பெஞ்சமினின் மனைவி)

எம் குடும்பத்தின் குலவிளக்கே!பாசத்தின் சிகரமே! அன்பின் உறைவிடமே அம்மா! எம்மை வாஞ்சையுடன் பெற்றெடுத்து எமக்கு எவ்விடர் வந்தபோதும் வருந்தி மனம் நொந்தாயே. உன் அன்பு மொழி கேட்க ஆவலுறுகின்றோம். உன் அவலச் செய்தி கேட்டதும் கடல் கடந்து வாழும் உன் பாசமகன்மார் கலங்கிய படியுள்ளனர். உன்னை அம்மா என்றழைக்க ஆசைப்படுகின்றோம். அன்பே அம்மா! எமக்காய் நீ அங்கிருந்து இறைவனை வேண்டுவாய்.

இவரின் ஆத்ம சாந்திக்காக(21 – 2 – 90)புதனன்று காலை 6. 30 மணிக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன், பாசமிகு பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 43, புது வீதி ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (2530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

**பொருள்:**

இரப்பவன் எவரிடத்திலும் சினம் கொள்ளாதிருக்க வேண்டும்; அவன் அடைந்துள்ள வறுமைத் துன்பமே அவனுக்கு அறிவு புகட்டும் சான்றாக அமையும்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
21-02-1990

தொலைபேசி: 2288
த. பெ. இலக்கம் : 23


## நடைமுறை இணைப்பு வேண்டும்

காங்கேசன்துறைக்கும் பொத்துவிலுக்கும் இடையில் கடற்போக்குவரத்து ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இரண்டு இடங்களுக்கும் இடையில் நாளாந்தம் இரண்டு தடவைகள் படகுச்சேவை நடத்தப்பட வேண்டும் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தக் கோரிக்கை கவனத்தில் கொள்ளத் தக்கது.

வடக்கும் கிழக்கும் ஒரே மாகாணமாக்கப்பட்டிருக்கின்றன. வெறும் சட்டத்தில் அல்லது பெயரளவில் இணைக்கப்பட்டு ஒன்றாகிவிட்டதாகக் கூறப்படுவதைத் தவிர, இரண்டு பிராந்தியங்களுக்கும் இடையேயான தொடர்புகள், பொருளாதார — அபிவிருத்தி உறவுகள் இன்னும் நெருக்கமுறவில்லை. வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான நேரடிப் போக்குவரத்து வசதி உரிய விதத்தில், உகந்த வகையில் அமையாததே அதற்கு முக்கிய காரணமாகும்.

வடக்குக்கும் கிழக்கிற்கும் இடையில் மிகக் குறைந்த நேரத்தில் நேரடியாகப் பயணம் செய்யக்கூடிய போக்குவரத்து வசதிகள் இல்லை.

ரயில் சேவையைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் இடையில் ஒரே நாளில் பயணம் செய்வது என்பது கஷ்டம். எப்படிக் கணக்குப் பார்த்தாலும், இரண்டு நாட்களின் பொழுதுகள் வீணாகும். மறுபுறத்தில், பல இடங்களில் இறங்கி ஏறும் சிரமங்களும், கஷ்டங்களும், போதும் போதும் என்றாகிவிடும்.

யாழ்ப்பாணத்திற்கும் கிழக்கின் மூன்று மாவட்டங்களுக்கும் இடையிலான பஸ் சேவைகளும் திருப்திகரமானவையாக இல்லை. யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் இடையில் தனித்தனி நேரடி நெடுஞ்சாலை எதுவும் இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய மூன்று மாவட்டங்களையும் தொட்டுச் செல்லும், குறைந்த நேரத்தில் பயணம் செய்யக்கூடிய, நெடுஞ்சாலை தானும் இல்லை.

யாழ்ப்பாணம் - கொழும்புப் பயணம் பல வகைகளிலும் வசதியானதும், நேரத்தை விழுங்காததுமாக உள்ளது. ஓரிடத்திலிருந்து காலையில் புறப்பட்டால் நண்பகல் அடுத்த முனை சேரலாம். இரவில் புறப்பட்டால் அடுத்த நாள் காலையில் வேண்டிய இடத்தைச் சேரலாம்.

யாழ் - கொழும்பு தரைப்பயணத்துடன் யாழ் - கிழக்குப் பயணத்தை ஒப்பிடமுடியாதவாறு இரண்டாவது சீரற்றதாகவே உள்ளது.

கொழும்பை மையமாக வைத்து வடக்கிற்கும், கிழக்கிற்கும் தனித்தனியான போக்குவரத்து மற்றும் தூரத் தொடர்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தரைப் போக்குவரத்தாயினும் சரி, விமானப் போக்குவரத்தாயினும் சரி கொழும்புக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையிலேயே அந்தத் தொடர்புகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

அதிகாரம் கொழும்பிலிருந்ததால் அதனை மையமாக வைத்தே ஏனைய மாகாணங்களுக்கு இடையேயான தொடர்புகள், தொடர்பு வசதிகள் ஆக்கப்பட்டுள்ளன. மாகாணத்துக்கு மாகாணம் (அருகருகே இருப்பவை தவிர) இடையேயான போக்குவரத்து மற்றும் வர்த்தகத் தொடர்பு வசதிகள் மிகக் குறைவு.

வடக்கும் கிழக்கும் அதனாலேயே இடைவெளி கண்டன. தூரப் பிரதேசங்களாக்கப்பட்டன. இந்த நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

இரண்டு பிராந்தியங்களினதும் முனைகளுக்கு இடையில், குறுகிய நேரத்திலும், சிரமம் இல்லாமலும் தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகள் செய்யப்பட்டால் மட்டுமே இரண்டும் ஒன்றாகியதை யதார்த்த பூர்வமாக்க முடியும். நெருங்கி வந்த உணர்வை உருவாக்க முடியும்.

முதலில் பிரதானமாக, போக்குவரத்தைச் சீராக்கி இரண்டு பிராந்தியங்களையும் நெருங்கச் செய்தால், அதன் விளைவாகப் படிப்படியாக வர்த்தக, அபிவிருத்தி, சமூகத் தொடர்புகளும் உறவுகளும் நெருங்கிவிடும்.

வடக்கு மாகாண மாவட்டங்களுக்கும், கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கும் இடையில் தரை, கடல், விமான மார்க்கப் போக்குவரத்து உடனடியாகச் சீர் செய்யப்பட வேண்டும். நேரடி நெடுஞ்சாலை, கடல் வழிப் பயணம் ஆகிய இரண்டுக்கும் முன்னுரிமை தரப்பட்டு திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்த வேண்டும். ஏனைய திட்டங்களை விட, இந்த இரண்டிலும் வடக்கு-கிழக்கு மாகாண சபை உடனடிக் கவனம் செலுத்தட்டும். அதன் மூலமே வடக்கு - கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்க நடைமுறைப் பாலம் அமைக்க முடியும்.

## ஐவரைக் கடித்த நாய்

சாவகச்சேரி, பெப் 21

சாவகச்சேரியைச் சேர்ந்த சங்கத்தானையில் நாய் ஒன்று சுமார் ஒரு மணித்தியால இடைவெளியில் ஐந்து பேரைக் கடித்தது.

வைத்தியசாலைக்கு மருந்து கட்ட வந்த ஐவரும் தங்களுக்குக் கடித்தது ஒரே நாய் தான் என்று அடையாளம் தெரிவித்தனர்.

ஆனால் அந்த நாய் ஒருவர் கையிலும் சிக்காது தப்பி விட்டதாம். (இ-31)

# கள் அடைக்கும் தொழிற்சாலை மீண்டும் இயங்கும்

காங்கேசன்துறை பெப். 21

தெல்லிப்பழை தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை அடுத்த மாதத்திலிருந்து செயல்பட உள்ளது

கடந்த கால வன் செயல்களினால் செயல்பட முடியாமல் ஸ்தம்பித்திருந்த இத் தொழிற்சாலையை இந்த ஆண்டு செயல்பட வைக்க சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

சேந்தாங்குளத்தில் அமைந்துள்ள இத் தொழிற்சாலை மூலம் நாளொன்றுக்கு 1500 போத்தல்கள் ள போத்தலில் அடைக்கக் கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதத்திலிருந்து கள் சீசன் ஆரம்பமாக இருப்பதால் அதனை வீணாக்காது போத்தலில் அடைத்து தென் பகுதியிலும் மற்றும் வெளிமாவட்டங்களிலும் சந்தைப்படுத்துவது எனவும் மேற்படி சங்கம் தீர்மானித்துள்ளது. (இ - 68)




லக்ஸ்பிறே பால்மாவை உற்பத்தி செய்யும் 'லங்கா மில்க் பூட்ஸ்'' நிறுவனத்தின் வடபகுதி விற்பனை முகவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை ஞானம்ஸ் ஹோட்டலில் இடம் பெற்றது;

மில்க் பூட்ஸ் நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் திரு. கே. ராதாகிருஷ்ணன் நிகழ்ச்சியில் உரையாற்றும் போது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.

ஒன்று கூடல் நிகழ்ச்சியின் போது லக்ஸ்பிறே விற்பனை முகவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருவத்துவ பீடத்திற்கு வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் 'டெக்' ஒன்றையும் அன்பளிப்புச் செய்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி நாகேஸ்வரனிடம் தொலைக்காட்சிப் பெட்டியும், 'டெக்கும்' கையளிக்கப்பட்டன. (அ-10)

## அரச எழுது வினைஞர் சங்க புனரமைப்பு வேலை ஆரம்பம்

வவுனியா பெப். 21

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக செயலற்றிருந்த அகில இலங்கை அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. செ. பரராசசிங்கம் தெரிவித்தார்.

நாட்டு நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தினால் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை என்பன காரணமாகவே தமது சங்கம் செயற்படாதிருந்தது என்றும் அவர் தெரிவித்தார். அரசினால் விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளதை அடுத்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை. மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கிளைகளைப் புனரமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

இதனிடையில், அடுத்த மாத இறுதியளவில் சங்கத்தின் பொதுச்சபை யாழ்ப்பாணத்தில் கூடி புதிய நிர்வாக சபையினரைத் தெரிவு செய்யவுள்ளது.

மேலும் இப் பொதுக் கூட்டத்தில்பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கான முஸ்தீபுகளும் மாவட்ட ரீதியில் நடைபெறுகின்றன. (இ - 164)

## மீண்டும் இயங்குகிறது

முல்லைத்தீவு பெப் 21

முல்லைத்தீவு மாவட்டநீதி மன்றத்தின் அலுவலகம் நீண்டகால இடைவெளிக்குபின் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. (இ-92)

## ரூபா 1 கோடி காசோலை வந்தது

யாழ்ப்பாணம், பெப் 21

யாழ் மாவட்டத்தில் கடும் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் வழங்க 1 கோடி ரூபாவுக்கான காசோலை யாழ் அரசாங்க செயலகத்துக்கு வந்துசேர்ந்தது.

இந்நிதியிலிருந்து 200 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடையை மேலும் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கத் தேவையான நிதி இவ்வாரம் வந்துசேரும் எனத் தெரிவிக்கப்பட்டது. )இ 3)

# மகா சிவராத்திரி நிகழ்ச்சிகள்

**நீராவியடி:**

ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி வழமைபோல் யாழ்ப்பாணம் சைவமகளிர் மன்றத்தினரால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இரவு நான்குசாமங்களிலும் விசேட பூசைகள், அபிஷேகங்கள் இடம்பெறும். பஜனை, பண்ணிசை, வாத்திய இசை: சொற்பொழிவுகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**புதுக்குடியிருப்பு:**

புதுநகர் சிவன்கோவிலில் மகா சிவராத்திரியை ஒட்டி விவாத அரங்குகள், வில்லிசை, சமயச் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெறும்.

**சாவகச்சேரி:**

கல்வயல் இந்து இளைஞர் மன்றம் சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீச்சரத்துக்கு புனித யாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்கிறது.

**சரசாலை:**

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபையும், சரசாலை இந்து இளைஞர் மன்றமும் இணைந்து மகா சிவராத்திரியை ஒட்டி பேச்சுப் போட்டி ஒன்றை நடத்துகின்றன.

**சாவகச்சேரி:**

சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் கோவிலில் நான்கு சாமப் பூசையும், புராணப் படனம், பண்ணிசை விருந்து, சமயச் சொற்பொழிவு என்பனவும் நடைபெறும். சாவகச்சேரி நீதவான் புலவர் செஞ்சொற்கொண்டல் திரு. மு. திருநாவுக்கரசு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

**கோண்டாவில்:**

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அம்பாளுக்கு மாலை 6 மணிக்கு விசேட அபிடேகத்துடன் 6 சாமப் பூசையும் நடைபெறும். 24ஆம் திகதி அதிகாலை அம்பாள் உள்வீதி வலம் வரும் காட்சியும் இடம் பெறும்.

**சுழிபுரம்:**

வழக்கம்பரை அம்மன் கோவிலில் முதல் முறையாக மகா சிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கிறது. நான்கு சாம விசேட அபிடேகத் திருவிழாவும் இரவு பூராவும் கூட்டுப் பிரார்த்தனை, இன்னிசை, சமய விரிவுரைகள் ஆகியனவும் நடைபெறும்.

**கோப்பாய்:**

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கோப்பாய் இந்து மாமன்றம் சமய அறிவுப் போட்டி, சமயப் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்தவுள்ளது.

**வேலணை:**

வேலணை சைவ சேவா சங்கம் நடத்தும் மகா சிவராத்திரி விழா வேலணை மேற்கு முடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும். திருமுறையோதல், பண்ணிசை, கவியரங்கம், பட்டி மன்றம் ஆகியன அதில் அடங்கும்.

**ஊர்காவற்றுறை:**

கரம்பன் குரு மடத்தில் சிவராத்திரி தினத்தன்று காலை 9 மணிமுதல் தோத்திரம், கந்தபுராண அடிமுடி தேடும் படலம் படித்தல், விரிவுரைகள் முதலியன இடம்பெறும்.

**தெல்லிப்பழை:**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி விழாவும் சிவதீட்சை கொடுத்தலும் நடைபெறும். அத்துடன் சொற்பொழிவு புராணபடனம், பண்ணிசை, கூட்டு வழிபாடு, பஞ்சாட்சரப் பதிகம் ஓதுதல், கதம்ப நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெறும்.

**மாவிட்டபுரம்:**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நான்கு ஜாமமும் விசேட அபிடேக ஆராதனைகளும், விசேட நிகழ்ச்சிகளும் இடம்பெற்று அதிகாலை கீரிமலை புனித தீர்த்தக் கரைக்கு மூர்த்திகள் எழுந்தருளி தீர்த்தம் நடைபெறும்.

**கீரிமலை:**

நகுலேஸ்வர சுவாமி ஆலயத்தில் நான்கு ஜாமமும் விசேட அபிடேக பூசை ஆராதனைகளும், காலை நிகழ்ச்சிகளும்இடம்பெறுவதுடன்அதிகாலை புனித தீர்த்தக் கரையில் தீர்த்த உற்சவமும் இடம் பெறும்.

**மாதகல்**

நுணசை முருகமூர்த்தி கோவிலில் முருகப்பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் புராண விரிவுரைகள், பஜனைகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியன இரவிரவாக நடைபெறும்.

**தெல்லிப்பழை:**

கவளாவத்தை ஞான வைரவர் சுவாமி கோவிலில் நான்கு ஜாம பூஜைகளுடன் விசேட நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திருநெல்வேலி:**

சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி மண்டபத்திலும் பஜனை, நற்சிந்தனை உரைகள் முதலியவற்றுடன் மகா சிவராத்திரி கொண்டாடப்படும். (சு)

## இரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்சங்கத்துக்குபுதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கானபரீட்சைகள் ஏப்ரல் மாதம்முதல் வாரத்தில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் மார்ச்4 ஆம்தி தியும் 11ஆம் திகதியும்காலை 10 00 மணிக்குயாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப் 21

திருக்கேதீஸ்வரம் மகா சிவராத்திரிமடபரிபாலனசபை முதல் தடவையாக மன்னார் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் சமய அறிவுப் போட்டி ஒன்றை நடாத்துகின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மகா சிவராத்திரி விழாவை யொட்டியே இப்போட்டி நடைபெற இருக்கிறது.

அத்துடன் இந்த சபையின் ஆதரவில் தண்ணீர்பந்தலும் அன்னதானமும் நடைபெற இருக்கின்றன. (இ-3)

## அன்னை சாரதாதேவி ஜயந்தி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப் 21

ரூபவாஹினியின் சைவ நீதி என்ற பகுதியில் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஜயந்தியின் சில பகுதிகள் ஒளிபரப்பப்படும். (சு)

## சமய சந்நிதிகளில்

### உற்சவம்

யாழ்ப்பாணம், பெப் 21

ஊரெழு வீரகத்தி விநாயகர் உற்சவம் இன்று புதன் கிழமை ஆரம்பமாகின்றது. (சு)

### இலட்சார்ச்சனை

சாவகச்சேரி பெப் 21

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீதுர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் இலட்சார்ச்சனை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும் இலட்சார்ச்சனையின் பூர்த்திவிழா மார்ச் பத்தாம் திகதி நடைபெறும். அதேதினம் மாசி மகப்பெரு விழாவும் நடைபெறும். (இ-31)

## வாசகர் திருமுகம்

### பிரயாண வசதி

மிருசுவில் வடக்கு வேகமாக வளர்ந்து வரும் ஒரு கிராமமாகும். இக்கிராமத்தில் புதிதாக அரசினால் ஆரம்பிக்கப்பட்ட 'பெரியாரோடை' குடியேற்றத்திட்டம், விவசாயம், மரக்கறி உணவுப் பொருள்கள் செய்வதில் மிகவும் முன்னணியில் திகழ்கிறது.

இவ்வுற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்த ஐந்து மைல் தொலைவில் உள்ள கொடிகாமம் சந்தைக்கே செல்லவேண்டும்.

இக்குடியேற்றத்தில் இருந்து கொடிகாமம் சந்தைக்கு மக்கள் பலர் கால்நடையாகவும் தலைச்சுமையாகவும்செல்கின்றனர். தற்போது அவசியமாக உடனடியாகத் தேவைப்படுவது பிரயாண வசதியாகும்.

இதற்கென்று தனியாக ஒரு பஸ் சேவை நடத்தத் தேவையில்லை. பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் மட்டும் செல்லும் இ. போ. ச. பேருந்துகளும் 'வான்' களும் கட்டாயமாக மிருசுவில் வடக்குக்கூடாகவே செல்ல வேண்டும் என்ற ஒரு கட்டாயம் இருந்தால் நிச்சயம் பிரயாணப் பிரச்சினை தீர்ந்தமாதிரி, ஆகிவிடும். வவுனியா, கிளிநொச்சி முதலிய தூர இடங்களுக்குச் செல்லும் பஸ் வண்டிகள் மிருசுவில் வடக்குக்கு வரத் தேவையில்லை.

சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள தமிழ் நெஞ்சங்கள் அனைத்துக்கும் இது சமர்ப்பணம்.

சி. இ. சத்தியேந்திரா
மிருசுவில்.

### சிங்களச் சட்டமும் தமிழ் அரச ஊழியரும்

அரசியல் அமைப்பின் நான்காம் அத்தியாயம் திருத்தப்பட்டுவிட்டது. சிங்களத்தோடு தமிழும் அரசாங்க மொழியாக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பொது நிர்வாக அமைச்சும் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது. தமிழ் மொழி அமுலாக்கலுக்குரிய நடவடிக்கைகளும். வெகு விமரிசையாக நடப்பதாக அன்றாடம் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

ஆனால் பாதிப்புற்ற தமிழ் அரசாங்க ஊழியர்களோ முத்தெடுக்கப்போய் கிளிசல் பொறுக்கிய நிலையில்தான் இப்போதும் உள்ளனர். அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் தொடர்கின்றன. தொடர்ந்தும் அரசாங்க சேவையில் சேர்பவர்கள் சிங்கள மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் என்ற நிபந்தனைகளை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகைகள் வெளியிட்ட வண்ணமே உள்ளன. அரசாங்கம் இதுவரை 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சிங்களச் சட்டத்தை அமுலாக்குவதற்காக தற்போது நடைமுறையிலுள்ள சுற்று நிருபங்கள் சட்டவிதிகள் ஆகியவற்றை ஏன் நீக்கவில்லை?

அரசாங்கம் மேற்படிபாதிப்புற்ற தமிழ் அரசாங்க ஊழியர்களின் நியமனங்களை உறுதிப்படுத்தவும். சாதாரணமாகக் கிடைத்திருக்க வேண்டிய பதவி உயர்வுகளை உரிய திகதியிலிருந்து வழங்கவும், மற்றும்நிறுத்தப்பட்ட ஆண்டுச்சம்பள உயர்வுகளை உரிய திகதியிலிருந்து நிலுவையுடன்வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மு. தியாகராசா
பாதிக்கப்பட்ட
இளைப்பாறிய
ஊழியர்.
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தேவை ★

உதயன் நிறுவன அச்சகப் பகுதியில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை

1. **அச்சுக்கோர்ப்பாளர்**

அச்சுக்கோர்ப்பதில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அனுபவத்துக்கும், திறமைக்கும் ஏற்ற சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

2. **பயிலுநர்**

அச்சுக்கோர்த்தலைப் பயில விரும்புவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஜி. சி. ஈ. சாதாரண தரத்தில் சித்தி எய்திய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும்.

பயிலுநர் காலத்தில் படி வழங்கப்படும்.

3. **பக்கம் கட்டுநர்**

பத்திரிகை அலுவலகங்களில் பக்கம் கட்டுதில் முன் அனுபவம் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

திறமைக்கும், அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கல்வித் தகைமை, தொழில் அனுபவம், நற்சான்று அத்தாட்சிப் பத்திரங்களுடன் பின்வரும் முகவரிக்கு 22-2-90க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி)

**நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
**292/2, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


6 வருட இடைவெளியின் பின்

# முல்லை. தண்ணீர்முறிப்பு திட்டத்தில் மீண்டும் விவசாயம்

முல்லைத்தீவு, பெப். 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தண்ணீர்முறிப்புத்திட்டத்தில் உள்ள நெற்காணிகளில் மீண்டும் விவசாயம் செய்யப்பட இருக்கிறது,

1983 ஆம் ஆண்டு முதல் இப்பகுதி ஸ்ரீலங்கா இராணுவத்தால் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டிருந்ததால் நெற்செய்கை கைவிடப்பட்டிருந்தது.

தற்போது சகல தடைகளும் நீக்கப்பட்டுள்ளன.

800 ஏக்கர் நெற்காணியில் சிறுபோகம் செய்யவும் அதற்கான வசதி வழங்கவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் அனுமதி வழங்கியுள்ளார்.

நீர்வழங்கும் நட்வடிக்கையிலும், காணிகளை நெற்செய்கையில் ஈடுபடுத்துவதிலும் குடியேற்ற உத்தியோகஸ்தர் திரு. கே. தங்கராசா ஈடுபட்டுள்ளார். (இ- 92)

சனசமூக நிலையங்களுக்கான

# அரச நன்கொடைப் பணம் மேலும் அதிகரிக்கப்படும்

குருநகர் பெப் 21

''சனசமூக நிலையங்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் அரச நன்கொடைப் பணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது''.

சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதிபாஸ்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுசையில் கூறியதாவது:

''சனசமூகநிலையங்களுக்கு அரசு வழங்கும் நிதிபோதாது என்ற குறை இங்கே சுட்டிக் காட்டப்பட்டது. சனசமூக நிலையங்கள் சமூக அங்கத்தினரின் தெம்பிலேயே நடைபெற வேண்டுமென்பது அரசினரின் தீர்மானம் என்ற போதும் உள்ளூராட்சி அலுவலக முயற்சிகளால் ஐம்பது ரூபாவில்இருந்து நன்கொடை நிதி படிப்படியாக அறுநூறு ரூபா வரை உயர்த்தப்பட்டு வந்துள்ளது.

1990 ஆம் ஆண்டில் முதல் தர நிலையங்களுக்கு 2000 ரூபாவும், இரண்டாம் தர நிலையங்களுக்கு 1500 ரூபாவும், மூன்றாம் தர நிலையங்களுக்கு 1000 ரூபாவும் வழங்குவதற்கான முயற்சிகளில் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறு திருமதி பாஸ்கரன்தெரிவித்தார். (இ-51)

## பயங்கரவாத ஒழிப்பு மாநாடு

கொழும்பு, பெப். 21

பயங்கரவாதத்தை சர்வதேச மட்டத்தில் ஒழிப்பதற்கான சகல நடவடிக்கைகளுக்கும், செயற்திட்டங்களுக்கும் இலங்கை தனது முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கும்.

இவ்வாறு கொழும்பில் ஆரம்பமாகிய பயங்கரவாத ஒழிப்புச் சம்பந்தமான சார்க் மாநாட்டில் உரையாற்றிய வெளிநாட்டமைச்சின் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்தினா தெரிவித்தார்.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் கலந்து கொள்ளும் இந்த மாநாடு இம்மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறும். (அ)

## செஞ்சிலுவை சங்கம் உதவி

முல்லைத்தீவு, பெப் 21

முல்லைத்தீவுஉதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கொக்கிளாய் கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணிஆகிய இடங்களுக்கு மீளக் குடியமரச் செய்து தங்கள் காணிகளைத் துப்பரவு செய்து தற்காலிக விடுதிகளை அமைத்து வரும் 1500குடும்பத் தலைவர்களுக்கு முல்லைத்தீவு மாவட்டசெஞ்சிலுவைச் சங்கம் அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கியது.

இவ் வைபவத்தில் யாழ் செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆனந்தராசாவும் கலந்து·விநியோகத்தைப் பார்வையிட்டார். (இ-92)

# சமுதாயத்துக்காகவே பாடசாலை இயங்க வேண்டும்

## பரிசளிப்பு விழாவில் அதிபர்

யாழ்ப்பாணம் பெப் 21

சமுதாயத்துக்காக பாடசாலைகள் இயங்க வேண்டுமே தவிர பாடசாலைகளுக்காக சமுதாயம் தன் நோக்கங்களை மாற்ற முடியாது. சமுதாயத்தின் ஒரு பகுதி தான் பாடசாலைகள் என்பதை மேலதிகாரிகள் உணர்ந்து கொள்கைகளை வகுக்க வேண்டும்.

இப்படிக் கூறினார் யாழ் மத்திய கல்லூரிஅதிபர் திரு. வே. பாலசுந்தரம்.

யாழ்- மத்திய கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பரிசளிப்பு உரையை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''சூழலுக்கு ஏற்ப பாடசாலையின் அபிவிருத்தியில் அதிபர் கவனமெடுக்கலாமே தவிர மேலதிகாரிகளால் இதைச் செய்ய முடியாது. எனவே இனிமேலாவது மேலதிகாரிகள் சமுதாயத்தின் விருப்பத்துக்கு மாறான கட்டுபாடுகளை விதிக்காமல் பாடசாலையைஅபிவிருத்திசெய்ய அதிபருக்கு உதவ வேண்டும்

இன்று நமது நாட்டில் தனியார் கல்வி இன்றியமையாததாகி விட்டது. பெற்றோர் பிள்ளைகளுக்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகிறார்கள். இதன் விளைவு சுயசிந்தனை, சுய ஆற்றல் இல்லாத ஒரு கிளிப்பிள்ளைச் சமுதாயம் ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது

மாணவர்களைபாடசாலைகளில் அனுமதிக்கும் விடயத்தில் கல்லூரியின் பாரம்பரியம் பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் போன்றோரின் அபிலாசைகளை நிறைவேற்றஅதிபருக்கு சுதந்திரம் இருக்க வேண்டும்

இப்படி அவர் கூறினார். (இ-3)

## நவீல்ட் பாடசாலை விளை. போட்டி

நவில்ட் செவிப்புலன்விழிப்புலன்இழந்தோர் பாடசாலையின்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 22 ஆம்திகதி வியாழக்கிழமை பி. ப. 1-30 மணிக்கு நடைபெறும் கலாநிதி திருமதி. ஜோய் கனகராசா பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கின்றார். (க)

## நூல் இலவசம்

சுய விலாசம் எழுதிய முத்திரைஒட்டியதபால் உறையை அனுப்பி உறையுடன் கூடிய ''சிவபுராணம்'' புத்தகத்தை இலவசமாக யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்திலிருந்து பெறலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

# யாழ். மாவட்டத்திற்கு நியமனம் பெறும் ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம் பெப் 21

வெளிமாகாணங்களில் மாவட்ட ரீதியில் நியமனம் பெற்றுச் சேவை புரிந்த ஆசிரியர்கள் பலர் இப்போது தமிழ் மாவட்டங்களுக்கு (இடமாற்ற) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ, வடமத்திய, மேற்கு மாகாணங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு நியமனம்செய்யப்பட்டவர்களின் பட்டியல்கள் உதயனில், 15 ஆம், 16ஆம் திகதி வெளியீடுகளில் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டிருந்தன.

மத்திய வடமேற்கு, ஊவா மாகாணங்களிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டோர் பட்டியல் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. விவரம் வருமாறு:

**மத்தியில் இருந்து**

செல்வி கே. மகாலிங்கம் (நாவலப்பிட்டிய), பி.யோகேஸ்வரி (ராஜவெல), செல்வி எஸ். திருமகள் (வத்தேகம), எஸ். தில்லைநாதன் (ஹென்டெசா), செல்வி எஸ். குமாரசாமி (புசெல்லாவ), செல்வி ஆர். மஞ்சுளாதேவி, [புசெல்லாவ] செல்வி இ. ஜே. மரிய அன்னா (நாவலப்பிட்டி), செல்வி பி. யோகேஸ்வரி (ராஜவெல), எஸ். கணேஸ்வரன் (மடவலபசார்) ரி.சிவகுமாரன், [மடவலபசார்], சே. தவயோகநாதன், (மடவலபசார்), செல்வி எம். டி. எஸ். செபஸ்தியாம்பிள்ளை (கண்டி), கே. எம். ஈஸ்வரதேவர் (நாவலப்பிட்டி), செல்வி என். அம்பிகாதேவி (நாவலப்பிட்டி), செல்வி எம். கணேஷ் (நாவலப்பிட்டி), செல்வி எம். யோகேஸ்வரி (கண்டி), என். சுகன்யா (கலெவெல), எம். அரசரத்னம் (மாத்தளை), செல்வி கே. மகாலக்குமி (கலெவெல), செல்வி வி மேரிமக்கிறித்தா]கலெவெல] திருமதி ஆர். திருநாவுக்கரசு (மாத்தளை),

செல்வி வி. நாகம்மா (றத்தோட்ட), திருமதி சி. சிவகுமாரன், எஸ். எஸ். சண்முகநாதன் (நானுஓயா), செல்வி எஸ். செல்வராணி, (ஹல்கிரான் ஓயா), செல்வி ரி. ஜெயகுமாரி (ஹல்கிரான் ஓயா), திருமதி எஸ். கதிர்காமநாதன் (பூண்டுலோயா) எஸ். பாக்கியரஜனி (நுவரேலியா), சி. அருள்மொழி (நுவரெலியா). செல்வி எம். பி. சாந்தி ராஜநாயகம் (வின்டுல) திருமதி ஆர். சுப்பிரமணியம் (தலவாக்கலை), இ. ராகவன்(அக்ரபத்தன), எஸ்.சிவதர்சினி(நுவரெலியா தீனதயாளதேவி(உடப்புசெல்லாவ), டி. சி. முத்துக்குமாரு (மஸ்கெலியா), எஸ். கணேசகுமார் [பொகவந்தலாவ]. செல்வி எஸ். சின்னத்தம்பி [மஸ்கெலியா], செல்வி கே. சிவகுமாரி [கொட்டகல], திருமதி ரி. பஞ்சாட்சரம் [ஹட்டன்], செல்வி எஸ். அனுஷாதேவி [ஹட்டன்], என். சண்முகநாதன் [ஹட்டன்], திருமதி எஸ். சரோஜினி, [ஹட்டன்], செல்வி சரோஜினிதேவி, யோகலிங்கம் [நோர்வூட்], ஜே. எப். றோய் நேசராசா [கொட்டகல], கே. செந்தூர்வேல் [ஹட்டன்], செல்வி பி. பத்மமலர் [ஹட்டன்], திருமதி கே. கலைச் செல்வன், எஸ். கணபதிப்பிள்ளை [பொகவந்தலாவ],

**வடமேற்கில் இருந்து**

கே. செல்வராணி (பொன்குலம்), செல்வி என். செல்லத்துரை (கல்கமுவ), செல்வி சிவசோதி பொன்னையா (கொக்குனகொல்ல), கே. கிருஷ்ணபாலசுப்பிரமணியம் (தம்புட்டே). செல்வி கே. செல்லத்துரை (குருணாகலை), செல்வி ஆர். தனலட்சுமி (குருணாகலை), எஸ். செந்தில்நாதன் நாரம்ஹல), செல்வி ரி. ஜோர்ஜ் (குருணாகலை), எஸ். சந்திரமோகன் (கொக்குனுக்கொல்ல), ஏ. ராமநாதன் (வேவகம), செல்வி ஆர். வி. இலியாஸ் (சிலாபம்), திருமதி வி. ராஜகோபால் (எத்தாளை), திருமதி ஏ. குலேந்திரன் (புத்தளம்), செல்வி ராசமலர் ராமலிங்கம் (புத்தளம்), பி. விஸ்வநாதாதன் (பங்கதேனியா) செல்வி ஜே. நிமல்டா (பலாவி), திருமதி கே. குலதேவி (நுரைச்சோலை),

திருமதி ஜ. பாலச்சந்திரன் (உடப்பு), செல்வி. ஏ. மகாதேவி, (கண்டல்லவுலி), செல்வி ஜ. சின்னத்துரை (கண்டல்லவுலி),பி. வின்சன் (உடப்பு), செல்வி, எஸ். கந்தசாமி (கொட்டன்தீவு), செல்வி எஸ். பார்வதிதேவி (புத்தளம்), திருமதி ரி. சிவகுமாரன் (புத்தளம்), திருமதி ஆர். சுசிலா ( புத்தளம்), ரி. பாலச்சந்திரன் (புத்தளம்), ஏ. கதிர்காமநாதன் (புத்தளம்), செல்வி எஸ். சோமசுந்தரம் (புத்தளம்),

**ஊவாவில் இருந்து**

கே. பிரேமகாந்தன் (பதுளை), சரோஜாஐயங்கள் (பசறை), செல்வி எஸ். சுதாஜினி (பதுளை), எஸ். விவேகானந்தன் (ஹப்புத்தளை), எஸ். சுதந்திரராஜா (ஹப்புத்தளை), (க)

## மற்றும் ஒரு தபால் வான்

யாழ்ப்பாணம், பெப் 21

யாழ் மத்திய தபாலகத்துக்கு மேலும் ஒரு தபால் வான் கிடைத்துள்ளது இத்துடன் 5 தபால் வான்கள் அனுப்பப்பட்டு விட்டன. (இ-10)

## நெல்லியடியில்

யாழ்ப்பாணம், பெப். 21

நெல்லியடிப் பகுதியில் பதற்றம் ஏற்படக்கூடும் என்றிருந்த நிலை, ஒருவாறு தவிர்க்கப்பட்டது.

இந்தியப் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை உண்டாகலாம் என முதலில் மக்கள் அஞ்சியபோதிலும் பின்னர் சமரசம் ஏற்பட்டு அமைதியானது.

நடந்தது இதுதான் :-

நெல்லியடி நகருக்குச் சமீபமாக திங்கள் காலை புலிக்கொடி ஏற்றிய இளைஞர் ஒருவரைப் படையினர் கைது செய்தனர்.

கைதான இளைஞரை விடுவிக்கும்படி, விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் இளைஞர் விடுவிக்கப்படவில்லை. அதனை அடுத்து இந்தியப் படை — விடுதலைப் புலிகளுக்கிடையில் முறுகல் நிலை ஏற்படலாம் என அஞ்சப்பட்டது.

ஆனால் பிரமுகர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்த முயற்சி ஒன்றின் பின் இளைஞர் விடுவிக்கப்பட்டார். நிலைமை சுமுகமானது. (அ-9)


## வாக்காளர் இடாப்பு மூடுதல்


வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 31-3-90 உடன் கிளைக்குழு தேர்தல் நடாத்துவதற்காக மூடப்படவுள்ளது. அங்கத்தவராக சேரவிரும்புவோர் ஒரு முழுப் பங்கின் பெறுமதி ரூபா 10/- செலுத்தி அங்கத்தவராக சேர்ந்து கிளைக்குழு தேர்தலில் பங்குகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்,
**வடமராட்சி கிழக்கு**
**ப. நோ. கூ. சங்கம்,**
**மருதங்கேணி, தாளையடி.**

(சி/3886)



## 31 ஆம் நாள் 'நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**ஆதர் தம்பிராஜா ஜெயரட்ணம்**

| தாயின் மடியில்: | இறைவன் அடியில்: |
|---|---|
| 08 - 07 - 1917 | 22 - 01 - 1990 |

எங்கள் அன்பான தந்தையே! எங்களை அன்புடனும், நேர்மையுடனும், வாழ, இப்புவியில் பண்புடனும், பாசத்துடனும், நல்வழி காட்டி வளர்த்து, கண் இமை போல் காத்து, உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் என்றென்றும் எம்நெஞ்சை விட்டகலாதப்பா!

அன்னாரின் நல்லடக்க ஆராதனையின் போது பங்கு கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், மலர் வளையங்கள் கொடுத்தவர்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவியோருக்கும், ஆறுதல் கூறி தேற்றியவர்களுக்கும், எமது மனமார்ந்த (இதயம் கனிந்த) நன்றியை தெரிவிக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

18, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(11825)


முத்துஐயன்கட்டில்

# தினேஸ் நினைவாக சிறுவர் பாடசாலை

ஒட்டுசுட்டான், பெப் 21

இந்திய அமைதிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரமரணமடைந்த கப்டன் தினேஸ் என்பவரின் நினைவாக அவரின் பெயரில் சிறுவர் பாடசாலை ஒன்று முத்துஐயன்கட்டு வலதுகரை 2ஆம் கண்டத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அப்பகுதி விவசாயிகளால் 60 ஆயிரம் ரூபா செலவில் பாடசாலை நிர்மாணிக்கப்பட்டது.

இதேவேளை முத்துஐயன்கட்டு இடதுகரையில் மேஜர் தங்கேஸ் என்பவரின் நினைவாக பஸ்தரிப்பு நிலையம் ஒன்று 30 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவை அடுத்து இடம் பெற்ற கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் சந்திரன், கைலாஸ், வேணு ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். (இ-113)

# வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை

திருகோணமலை பெப் 21

வடக்கு, கிழக்கு மாகாண அரசு வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து வேலையற்றபட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் மார்ச் 1 ஆம் திகதி முதல் நியமனம் வழங்குவதற்கான நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதாகப் பிரதம செயலாளர் திரு. வே. ந. சிவராசா தெரிவித்தார்.

இதே வேளை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத வேலையற்ற பட்டதாரிகளுக்கு இறுதி சந்தர்ப்பமாக எதிர் வரும் 25 ஆம் திகதி ஞாயிறு மு. ப. 9-00 மணிக்கு உள்துறைமுக வீதியில் உள்ள உட்துறை அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ )

## அபிவிருத்தி சங்கக்கூட்டம்

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்க மீளமைப்புக் கூட்டம் 25 ஆம் திகதி ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. க. கனகசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கோட்டக்கல்வி அலுவலகப் பொது நிர்வாகக்கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-51)


## பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது

பளைக்கும் இயக்கச்சிக்கும் இடையில் மணிபேஸ் ஒன்றும், குறிப்பிட்ட தொகைப் பணமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்பு:-

**வாணி இன்ஸ்ரிரியூட்,**
கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம்.

(2568)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாம் பதவி விலக அப்பதவிக்கு விடுதலைப் புலிகளை நியமிக்கலாம்

## மாகாணசபை குறித்து ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர்

சென்னை, பெப். 21

மாகாணசபை உறுப்பினர் பதவிகளை விட்டு நாம் விலகுகிறோம் அந்த இடங்களுக்கு புலிகளை நியமிக்கலாம்.

—இவ்வாறு கூறினார் ஈ. பி. ஆர். எல். எப். வின் மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. கே. சாந்தன். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியுடனான பேச்சுக்களின் போது ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதியாக கலந்து கொண்டவர் இவர்.

கருணாநிதியுடனான பேச்சுக்களின் பின்னர் அவர் கூறியதாவது:-

எம்மைப்பொறுத்தவரையில் மாகாணசபையைக் கலைப்பது ஒரு பிரச்சினை அல்ல.

மாகாண சபைக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் எமது பிரச்சினை,

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் கீழ் சபையில் உள்ள ஒரு கட்சியின் உறுப்பினர் பதவி விலக அந்த இடத்திற்கு வேறு ஆட்கள் நியமிக்கப்படமுடியும்.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு புதிதாக தேர்தல் நடத்தப்பட்டாலே் அதனைப் பயன்படுத்தி தமிழர் பகுதிகளில் இலங்கை அரசினால் குடியமர்த்தப்பட்ட சிங்களவர் சார்பில் பல உறுப்பினர் தெரிவு செய்யப்படும் சாத்தியம் உண்டு. இது குறித்தே நாம் அச்சப்படுகிறோம். அப்படித் தெரிவு செய்யப்படும் சிங்கள உறுப்பினர்களின் எண்ணிக்கை அவர்களின் விகிதாசாரத்திற்கு உரியதாக இருக்காது.

மாகாணசபைக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் பிரச்சினையை திசை திருப்பவே மாகாண சபையைக் கலைக்கும் யோசனையை பிரேமதாசா அரசு பயன்படுத்துகிறது. அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உதவுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்குபுதிதாகத் தேர்தலை இப்போது நடத்துவது சாத்தியமற்றது.

எமது அபிப்பிராயப்படி ஜனநாயக நடைமுறைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வரவிரும்பினால் மாகாணசபைக்குள் அவர்கள் வந்து சேர முடியும்,

இதற்கிணங்க நாம் பதவி விலகுகிறோம். அந்த இடங்களுக்கு விடுதலைப் புலிகளை நியமிக்கலாம்.

எம்மைப்பொறுத்தவரையில் மாகாணசபையை பிடித்துக் கொண்டு இருப்பது பிரச்சினையாக இருந்தது இல்லை இனி இருக்கப்போவதும் இல்லை. மாகாணசபைக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதே பிரதானமான பிரச்சினையாகும் —என்றார். (உ-எ)

## ஈ. பி. ஆர். எல். எவ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணசபையின் அமைச்சர் ஒருவரின் தலைமையில் நால்வர் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

நேற்றைய கூட்டத்தின் முடிவுகள் குறித்து வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் கூறியதாவது ;-

கலைஞருடன் நடத்திய பேச்சுகளுக்குப் பதிலாக புதிய யோசனைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. எமது பிரதிநிதிகள் குழு திருகோணமலையிலிருந்து சென்னை செல்ல வேண்டியிருப்பதால் முன்னர் அறிவித்தபடி கலைஞருக்கு எமது பதிலை 22ஆம் திகதி (வியாழக்கிழமை) தெரிவிக்க முடியாதுள்ளது.

அதற்குப் பதிலாக எமது புதிய யோசனை அனேகமாக 24ஆம் திகதியளவில் (சனியன்று) கலைஞரிடம் நேரடியாக சமர்ப்பிக்கப்படும்.

### எவரையும் பாதிக்காது

புதிய யோசனைகள் எந்த இயக்கத்தையும் பாதிக்காது. ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் வகையில், ஒற்றுமையும், சகஜ உறவும் நிலவக் கூடிய விதத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். இந்த யோசனையைத் தயாரித்திருக்கிறது.

இந்த யோசனை ஈழத் தமிழர்களின் நீண்ட கால அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கும்.

இந்த யோசனைகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட ஏனைய எல்லா இயக்கங்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏதும் ஏற்படாது என நான் நம்புகிறேன்.

கேள்வி:- அப்படியானால் இந்த யோசனை தமிழீழத்தைப் பிரகடனப்படுத்துவதாக இருக்குமா?

பதில்:- அது பற்றி இப்போது கூறமுடியாது. பிரச்சினையைத் தீர்க்க முற்படும் தமிழக முதல்வரிடம் இந்த யோசனையை ஒப்படைக்கிறோம். அதற்கு முன்னர் அதனை விளம்பரப்படுத்துவது முறையாகாது. அவரிடம் ஒப்படைக்கப்பட்டதும் புதிய யோசனை பகிரங்கப்படுத்தப்படும்— என்றார். (உ)

## வடக்கு--

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

15ஆம் திகதியளவில் இப்பகுதிகளை விட்டு வெளியேறும் போது அந்த இடங்களை தாங்கள் இழக்காமல், அங்கு தங்களை நிலைநிறுத்திக் கொள்ளச்செய்யும் நடவடிக்கைகளில் இலங்கைப் படையினர்ஈடுபட்டுள்ளனர்.

இந்தியப்படை வெளிறேற ஏற்பாடாகும் கட்டடங்களுக்கருகில் ஸ்ரீலங்கா படைப் பிரிவுகளின் பெயர்கள் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் நடப்பட்டு வருகின்றன. (உ-9)

## தடுப்புமுகாம்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறை மற்றும் பருத்தித்துறை பிரசைகள் குழு பிரமுகர்கள் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டு வந்தனர்.

இப்படி விடுதலை செய்யப்படுவதற்கு முன்னர் விடுதலையாகும் இளைஞர்களிடம் இருந்து படை அதிகாரிகள் சான்றிதழ் ஒன்றில் கையொப்பம் வாங்குவது வழக்கம்.

இந்தச் சான்றிதழில் விடுதலையாகும் இளைஞரின் பெயர் விவரங்கள் குறிப்பிடப்பட்டு "எனது பொருள்கள் யாவற்றையும் விடுதலையின்போது சரிவரப் பெற்றுக் கொண்டேன். எனக்குப் பாக்கியாக வரவேண்டிய பொருள்கள் ஏதும் படையினரிடம் இல்லை. தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் நான் துன்புறுத்தலுக்கோ தவறான நடத்துகைக்கோ ஆளாகவில்லை.

தடுப்புக் காவல் காலத்தில் எனக்குத் தேவைப்பட்டபோது உரிய மருத்துவ மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன" என்ற சாரப்பட வாசகங்கள் எழுதப்பட்டிருக்கும் என்றும் —

அந்தச் சான்றிதழில் கையெழுத்திடும்படி விடுதலையாகும் இளைஞர்கள் கேட்கப்பட்டு வந்தனர் என்றும்—

இதுவரை விடுதலையான சுமார் ஐநூறு பேரும் இப்படியான சான்றிதழில் கையொப்பமிட்ட பின்னரே விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிய வந்தது.

நேற்றும் உடுப்பிட்டி அமைதிப்படை முகாமில் வைத்து சுமார் எழுபது பேர்களைவிடுவிக்க ஏற்பாடாகியிருந்தது.

அதற்காக காங்கேசன்லிருந்து உடுப்பிட்டிக்கு அழைத்துச் செல்வதற்கு முன்னர், விடுவிப்புச் சான்றிதழில் கையெழுத்திடும்படி தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் கேட்கப்பட்டனர்.

ஆனால் நேற்று விடுவிக்கப்பட இருந்த இளைஞர்கள் அதற்கு மறுத்துவிட்டனர்.

கைதான ஆரம்ப கட்டத்தில் தாங்கள் துன்புறுத்தப்பட்டதாகவும்—

தங்களுக்குச் சரியான மருத்துவ வசதி வழங்கப்படவில்லை என்றும் —

அதனால் சான்றிதழில் தாங்கள் கையெழுத்திடப் போவதில்லை என்றும் இளைஞர்கள் பிடிவாதமாகத் தெரிவித்தனராம்

இந்தியப்படை அதிகாரிகள் அந்த இளைஞர்களுடன் பேசிப் பார்த்தனர். ஆனால் இளைஞர்கள் மசியவில்லை.

தடுப்புக்காவலில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான திரு. ரஹீமுடனும் படை அதிகாரிகள் இது குறித்துப் பேசியதாகத் தெரியவந்தது.

ஆனால் இணக்க நிலை ஏற்படாததை அடுத்து விடுவிப்பு ஏற்பாடு நேற்று நடைபெறவில்லை.

இளைஞர்கள் கையெழுத்திடமறுப்பது அவர்களது விடுதலையைத் தள்ளிப் போடச் செய்யும் என்று படை அதிகாரி ஒருவர் சொன்னார்.

"இது குறித்து மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும், அவர்கள் முடிவு எடுக்கும் வரை தடுப்புக்காவல் இளைஞர்கள் காவலிலேயே இருக்க வேண்டியிருக்கும்" என்று அவர் மேலும் சொன்னார்.

நேற்று விடுவிக்கப்படஇருந்தவர்களில் சுமார் நாற்பது பேர், தமிழகத்தில் வைத்து திரு. கிட்டு, திரு. பஷீர் காக்கா, திரு. ரஹீம் ஆகியோருடன் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் என்றும் தெரியவந்தது. (உ-9)

## வரதராஜப்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தை திரு. வரதராஜப் பெருமாள் தவறாகப் புரிந்து கொண்டார். அல்லது யாராவது அவரின் மனதை மாற்றியிருக்கக் கூடும்.

எந்தக் குழுவுக்கும் பாதகம் ஏற்படாதவாறு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகம் அமைதி மீண்டும் தோன்றக் கூடிய உகந்த சூழ்நிலையை உருவாக்குவதே எனது நோக்கம்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றாது என்றும் அதிகாரப் பரவலாக்கல் குறித்து தனக்குச் செய்தது போன்றே விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசு செய்யும் என்றும் திரு. வரதராஜப்பெருமாள் கூறுகிறார்.

தமிழர் அமைப்புக்களிடையே இரத்தம் சிந்துவதை தவிர்த்து நீதியான தீர்வு ஒன்றைக் காணுவதற்கு மனதார முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

நாளை என்ன நடக்கும் என்பதை ஒருவராலும் தீர்க்க தரிசனமாகக் கூறமுடியாது.

தமிழர் குழுக்களிடையே மோதலோ அல்லது கொலைகளோ ஏற்படக் கூடாது என்பதே எனது வேண்டுகோள்.

தமிழர் அமைப்புக்களிடையே நான் நடத்தும் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படக்கூடாது என்று எண்ணுபவர்கள்தான் இராமநாதபுரம் பொலீஸ் நிலையத் தாக்குதலுக்கு பின்னுக்கு இருந்திருக்கக் கூடும்.

— இப்படி திரு. கருணாநிதி சொன்னார்.

"திரு. வரதராஜப்பெருமாளின் அறிக்கைகள் தற்போது நடந்து வரும் பேச்சுக்களைப் பாதிக்குமா?" என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் —

"அவரது அறிக்கைக்கு இப்போது நடக்கும் பேச்சுக்களுக்கும் சம்பந்தமில்லை" என்று திரு. கருணாநிதி பதிலளித்தார். (உ-எ)

# கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

### ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் [யூ. என். எச். சி. ஆர்.] கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் மாணவர்களை அனுமதித்தல்

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் பாடசாலைகளில் இயங்கும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பாடசாலையை விட்டு விலகியோருக்காகக் கற்பிக்கப்படும் தொழிற்திறனபிவிருத்திப் பாடநெறிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளைப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம். யாழ்ப்பாணம். எமது விலாசத்திற்கு 28 – 02 – 90 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முறைசாராக் கல்விப் பிரிவுகளில் சேர்வதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடநெறிக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். எனினும் ஏதாவதொரு பயிற்சி மட்டும் கற்க அனுமதிக்கப்படுவார்.

விசேடமாக அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு இந்தியா சென்று மீண்டோரும் இடம் பெயர்ந்தோரும் — ஜனசவிய திட்டத்தின் கீழ் உதவி பெறுவோரும் — ஏனையோரும் ஆண், பெண் வேறுபாடின்றி அனுமதிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலம் 14 – 03 – 90 தொடக்கம் 30 – 12 – 90 வரையாகும். பயிற்சி முடிவில் திணைக்களத்தில் நடாத்தப்படும் அறிமுறை செயல்முறைப் பரீட்சைகளில் தோற்றிச் சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

| | பயிற்சி நிலையம் | பயிற்சியளிக்கவுள்ள பாடநெறி |
|---|---|---|
| 1. | கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | வீட்டு மின் இணைப்பு, மின் ஒட்டு வேலை, வானொலி திருத்துதல், ரீ. வீ. திருத்துதல். |
| 2. | யா/கனகரெத்தினம் ம. ம. வித் | மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து, தமிழ் தட்டெழுத்து, ஹொட்டல் ரேட்ஸ். |
| 3. | யா/அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தி. | உடையமைத்தல், ஹொட்டல் ரேட்ஸ். |
| 4. | யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித். | மேசன் தொழில். |
| 5. | யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி. | பனையோலை பொருள் உற்பத்தி, தமிழ் தட்டெழுத்து. |
| 6. | யா/தேவரயாளி இந்துக்கல்லூரி. | மரத்தளபாட உற்பத்தி, வீட்டு மின் இணைப்பு, மோட்டார் பொறித் தொழில், உடையமைத்தல், ஆங்கிலத் தட்டெழுத்து. |
| 7. | யா/மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி | உடையமைத்தல், ஆங்கில தட்டெழுத்து, தமிழ் தட்டெழுத்து. |
| 8. | யா/வைத்தீஸ்வரா வித்தி. | மோட்டார் றீ வைண்டிங், மின் உபகரணங்கள் உற்பத்தியும் பழுது பார்த்தலும், பத்திரிகைச் செய்தியாளர். |
| 9. | யா/நாவலர் ம. வித்தி. | மரச்சிற்பவேலையும், கைப்பணிப்பொருள் உற்பத்தியும், கட்புல சாதனங்கள் ஆக்கல், பட்டுத்திரை அச்சிடல். |
| 10. | யா/இந்துக் கல்லூரி | பட வரைஞர் பயிற்சி, வாகன மின் இணைப்பு, ரீ. வீ. திருத்துதல், இலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல். |
| 11. | யா/வேம்படி மகளிர் கல்லூரி | ஹொட்டல்ரேட்ஸ், சமையற்கலை, ஆங்கிலதட்டெழுத்து |
| 12. | யா/மத்திய கல்லூரி | குளிர் சாதனப்பெட்டி, காற்றுப் பதனிடு கருவி திருத்துதல், வானொலி திருத்துதல். |
| 13. | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | விவசாய உபகரணங்கள் பழுது பார்த்தல், மோட்டார் சைக்கிள் திருத்துதல். |
| 14. | யா/இணுவில் சைவப்பிரகாச ம. வித். | உடையமைத்தல். |
| 15. | யா/இணுவில் அ. மி. த. க. பா. | உடையமைத்தல். |
| 16. | யா/இணுவில் சைவ மகாஜனா வித்தி. | வீட்டு மின் இணைப்பு. |
| 17. | யா/இராமநாதன் கல்லூரி | ஹொட்டல் ரேட்ஸ், விவசாய விஞ்ஞானம். |
| 18. | யா/மயிலணி ம. வித். | மோட்டார் பொறித் தொழில். |
| 19. | யா/மல்லாகம் ம. வித். | ஆங்கில தட்டெழுத்து, ஹொட்டல் ரேட்ஸ், உடையமைத்தல். |
| 20. | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி. | படவரைஞர் பயிற்சி, ஆங்கில தட்டெழுத்து, மோட்டார் றீ வைண்டிங் |
| 21. | யா/வட்டு இந்துக் கல்லூரி | உடையமைத்தல் |
| 22. | யா/முத்துத்தம்பி ம. வித் | தோற்பொருள் உற்பத்தி. |
| 23. | யா/விக்ரோறியா கல்லூரி | உலோகப்பொருள் உற்பத்தி, ஆங்கில தட்டெழுத்து. |
| 24. | யா/சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித். | வீட்டு மின் இணைப்பு, மின் ஒட்டு வேலை, உடையமைத்தல், ஆங்கில தட்டெழுத்து. |
| 25. | யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி. | உடையமைத்தல், வாகனங்களுக்கான மின் இணைப்பு. ஆங்கில தட்டெழுத்து. |
| 26. | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி. | வீட்டு மின் இணைப்பு. |
| 27. | யா/நல்லூர் சி. சி. ரீ. எம். எஸ். | புத்தகம் கட்டுதலும் பேப்பர்பொருள் உற்பத்தியும். |
| 28. | யா/பாஷையூர் புனித அந். கல்லூரி | மோட்டார் படகு திருத்துதல், தும்புத் தொழில். |
| 29. | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தி. | உணவு பதனிடல். |

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுகளில் சேர்வதற்கான விண்ணப்பம்**

1. கற்க விரும்பும் பாடநெறி:- ..........................................
2. கற்க விரும்பும் பாடசாலை:- ..........................................
3. முழுப் பெயர்:- .......................................... பிறந்த திகதி:- ..........................
4. நிரந்தர முகவரி:- .......................................... வயது:- ..........................
5. தேசிய அடையாள அட்டை இலக்கம்:- .......................... பால்:- ..................
6. இறுதியாகக் கற்று விலகிய பாடசாலையும் விலகிய திகதியும்: ..........................
7. அகதிகளாக இந்தியா சென்று உத்தியோக பூர்வமாக இலங்கை திரும்பியிருப்பின் அடையாள அட்டை இலக்கமும், திகதியும்:- ..........................
8. அகதிகளாக இந்தியா சென்று உத்தியோக பூர்வமற்ற முறையில் திரும்பியிருப்பின் திரும்பிய திகதி:- ..........................
9. ஜனசக்தித் திட்டக் குடும்பத்தில் நீர் அங்கத்தவரா:- ..........................
10. உள்ளூரில் இடம் பெயர்ந்தவரா:- ..........................
11. தற்பொழுது ஏதாவது தொழில் புரிகிறீரா:- ..........................
    எத்துறையில்:- .......................... எங்கு:- ..........................
12. வேறு தொழில் நுட்பத் தகைமைகள் பெற்றிருப்பின் குறிப்பிடுக:- ..........................
13. கல்வித் தகைமை:- .......................... ..........................

.......................................... ..........................................
பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம் விண்ணப்பதாரியின் ஒப்பம்

திகதி:- ..........................................

### கல்வித் தகைமைகள்

1. ஆங்கில சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்
   க. பொ. த சாதாரணதரம் சித்தி (ஆங்கில பாடத்தில் 'சி' தரத்தில் உட்பட)
2. படவரைஞர் ஆங்கில மொழி மூலம்
   கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் 'சி' தரமுட்பட க. பொ. த சாதாரண சித்தி
3. ஹொட்டல் ரேட்ஸ் ஆங்கிலம் / தமிழ் மொழிமூலம் ஆண்டு 10 சித்தி
4. வானொலி திருத்துதல், எலத்திரனியல் உபகரணங்கள் ஆக்கல்
   கணிதம், விஞ்ஞானம் உட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி
5. தமிழ் தட்டெழுத்து தமிழ் 'சி' தரமுட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி
6. ஏனைய பாட நெறிகள் தரம் 8 சித்தி
7. தொலைக்காட்சி திருத்துதல்
   ஏற்கனவே வானொலி திருத்துதல் நெறியைக் கற்றவர்களுக்கு மட்டும் கணிதம், விஞ்ஞான 'சி' தரம் உட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி.
8. பத்திரிகைச் செய்தியாளர்
   தமிழ் 'சி' தரம், ஆங்கிலம் 'எஸ்' தரம் உட்பட க. பொ. த. சாதாரண தரம் சித்தி

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(சி-838)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# உதயன்

21 - 02 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/50
★ Proucessing செய்தல் இலவசம்,
★ விற்பனை-வர்ண நிழற்பட சுருள்கள்,
★ பட அல்பங்கள், பெற்றறிகள்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

தாக்குதல் சம்பவத்தை அடுத்து

## மண்டபம் பகுதியில் திங்களன்று பதற்றம்

இராமநாதபுரம், பெப் 21
இராமநாதபுரம் மண்டபம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை (நேற்று முன்தினம்) பதற்றம் நிலவியது.

ஈழத் தமிழ்ப் போராளிகளிடமிருந்து இராமநாதபுரத்தைப் பாதுகாக்க மத்திய ரிசர்வ் பொலீஸ் படை கொண்டுவரப்பட வேண்டும் என பொது மக்கள் மத்தியில் இருந்து கோரிக்கை எழும்பியது.

மண்டபம் அகதிகள் முகாமை இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

பொலீஸார் தங்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டார்கள் என்று பொதுமக்கள்மத்தியில் கருத்து நிலவியது. பொலீஸாருக்கு எதிரான உணர்வு இராமநாதபுரத்தில் காலையில் நிலவியது.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வால்டர் தேவராம் வந்த பின்னர் அந்த உணர்வு அகன்றுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் நக்ஸலைட்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் திரு. தேவாரம் தீவிரமாக ஈடுபட்டார் என்பது தெரிந்ததே.

அகதி முகாமில் அகதிகளைப் புறம்பாகவும் அகதிகளுடன் தங்கியுள்ள போராளிகளைத் தனியாகவும் தங்க வைக்கவேண்டும் என்ற அபிப்பிராயமும் ஏற்பட்டுள்ளது.

போராளிக் குழுக்களுடன் முதலமைச்சர் 'கருணாநிதி நடத்தும் பேச்சுக்களை பாதிக்கக்கூடிய எதனையும் நாம் செய்யக்கூடாது'— இப்படி சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராஜ்மோகன் கடந்த வாரம் அகதி முகாமுக்கு விஜயம் செய்தபோது தெரிவித்திருந்தார். (உ)

மண்டபம் பொலீஸ் நிலையத் தாக்குதல்

## தமிழக சட்டசபையைக் கூட்டுமாறு ஆளுநருக்கு தந்தி

சென்னை, பெப் 21
மண்டபம் பொலீஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் குறித்து விவாதிக்க தமிழ்நாடு சட்டசபையை அவசரமாகக் கூட்டும்படித மிழ்நாடு ஆளுநருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சட்டசபையில் உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சி உபதலைவர் குமரி அனந்தன் இந்த வேண்டுகோளை தந்தி மூலம் விடுத்தார்.

தமிழகத்தில்சட்டம்ஒழுங்கு பராமரிப்பு மோசமடைவதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை விவாதிக்க சட்டசபை கூட்டப்பட வேண்டும் என்று குமரிஅனந்தன் தந்தியில் கேட்டிருக்கிறார்.

## யாழ் செயலகத்துக்கு பட்டதாரிகள் படையெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 21
யாழ்ப்பாணம் செயலகத்துக்கு நேற்று பட்டதாரிகள் படையெடுத்து வந்தனர்.

யாழ். மாவட்டத்தில் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளை யாழ். அரசாங்க செயலகத்தில் சமுகமளிக்குமாறு யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அறிவித்திருந்தார்.

இவர்களை முகாமைத்துவ பயிற்சி அளிக்கும் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்காகவே இந்த அறிவிப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

மாகாணசபையில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான கடிதங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. (இ-3-10)

## யாழ் பல்கலைக்கழகத்தில் பிரிட்டிஷ் குழுவினர்

யாழ்ப்பாணம், பெப் 21
யாழ். பல்கலைக் கழகத்துக்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் தூதுக்குழுவினர் வைத்திய, விஞ்ஞான பீட நடைமுறைகளைப் பார்வையிட்டனர்.

பிரிட்டிஷ் கவுன்சிலைச் சேர்ந்த திரு. ஜோன் பெயின், பிரிட்டிஷ் தூதுவராலயத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் பிறாலி, கடல் கடந்த நாடுகள் இயற்கை வளங்கள் அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி கிளையாகூட், லண்டன் ஹரியட்வாட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் ஆய்வாளர் வைத்திய கலாநிதி றொபோட் ஸ்ரேஜன் ஆகியோர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்றுக் காலை வைத்திய பீடத்துக்கு வருகை தந்த இந்தக் குழுவினரை வைத்திய பீடாதிபதி பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் வரவேற்றார்.

பின்னர் இவர்கள் வைத்திய பீடத்தில் உள்ள ஆய்வு கூடங்களைப் பார்வையிட்டனர்.

மரவள்ளியில் இருந்து திரவ குழுக்கோஸ் தயாரிக்கும் முறைகள் பற்றி ஆராய்ந்தனர்.

இன்று காலை இக் குழுவினர் உயிரியல் தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவுடன் பேச்சுக்கள் நடாத்துவார்கள். (இ 3-10)

யாழ் வைத்திய பீடத்துடன்

## போதனா வைத்தியசாலை அமைப்பது பற்றி பேச்சு

யாழ். வைத்திய பீடத்துடன் போதனா வைத்தியசாலை அமைக்க வேண்டிய அவசியம் குறித்து, சுகாதார அமைச்சு அதிகாரிக்கும் வைத்திய பீட அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை பேச்சுக்கள் இடம்பெற்றன.

சுகாதார அமைச்சின் உதவிச் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஈ. இராஜநாதன் சுகாதார அமைச்சு சார்பில் கலந்துகொண்டார்.

இது சம்பந்தமான அறிக்கையை இவர் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்க இருக்கிறார்.

இந்த வைத்தியசாலையை அமைக்க முன்னாள் ஜனாதிபதி உறுதி அளித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

# தமது மத்தியஸ்த முயற்சிகளை கருணாநிதி கைவிட வேண்டும்

வாழப்பாடி இராமமூர்த்தி சொல்கிறார்

சென்னை, பெப். 21
இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மத்தியஸ்த முயற்சியை தமிழக முதலமைச்சர் கருணாநிதி கைவிட வேண்டும்.

ஏனென்றால் அது பல்வேறு குழுக்களிடையே சமாதானத்தைத் தோற்றுவிக்காது.

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

அவர் இது சம்பந்தமாகச் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

சமீபத்தில் இராமநாதபுரத்தில் தமிழ்ப் போராளிகள் நடத்திய துப்பாக்கிச் சண்டைச் சம்பவம் எனது கருத்தை நிரூபிக்கிறது.

தமிழ்ப் போராளிகளின் இம்மாதிரி நடவடிக்கைகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க முதலமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராமநாதபுரம் சம்பவம் பற்றி வெள்ளை அறிக்கை ஒன்றை மாநில அரசு வெளியிட வேண்டும்.

''போராளிகள் கடத்தி வந்து தமிழ்நாட்டில் வைத்திருக்கும் ஆயுதங்களைக் கைப்பற்ற மாநில அரசு தவறிவிட்டது'' என்றார். [அ-எ]

## கடத்தப்பட்ட பத்திரிகையாளர் திங்களன்று சடலமாக மீட்பு!

கொழும்பு, பெப் 21
கடந்த ஞாயிறு அதிகாலை இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சாட் டி சொய்ஸாவின் (வயது 32) சடலம் மொரட்டுவை கடற்கரையில் கிடக்க திங்களன்று கண்டுபிடிக்கப்பட்டது.

உடலில் ஆடைகள் இன்றி சடலம் கிடந்தது. கழுத்திலும் தலையிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

கடத்திச் சென்றவர்கள் பொலீஸ் சீருடை அணிந்து இருந்ததால் பொலீஸாரோ அல்லது இராணுவத்தினரோ கடத்திச் சென்றிருக்கலாம் என்ற வதந்தியை அரசு மறுத்தது.

திரு. சொய்ஸா பிரபல கதாசிரியரும், நடிகருமாவார். இவர் ரூபவாஹினி ஆங்கிலப் பகுதியில் செய்தி அறிவிப்பாளராகவும் பணிபுரிந்தவர். அதன் பின்னர் ஐ. பி. எஸ். செய்திச் சேவையில் கடமையாற்றினார். [உ-எ]

## தமிழகத்தில் போராளிகளின் ஆயுதங்கள் பறிமுதலாகும்!

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்படும் என்று மாநில பொலீஸ் டைரக்டர் ஜெனரல் பி. துரை அறிவித்திருக்கிறார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ்நாட்டில் ஈழப் போராளிகள் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கமுடியாது. தமிழ்நாட்டில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் போராளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் — என்றும் திரு. துரை தெரிவித்தார்.

போராளிகளிடையே மோதல் ஏற்படாமல் தடுக்கவும் அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றவும் ஆயுதப்படை பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வால்டர் தேவாரம் இராமநாதபுரத்தில் தங்கியுள்ளார்.

வட ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் நக்ஸலைட் தீவிரவாதச் செயல்கள் அதிகரித்தபோது திரு. தேவாரம்தான் அங்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அம் மாவட்டங்களில் தீவிரவாதச் செயல்கள் அடங்கின.

இதேவேளை —
மாநில பொலீஸ் டைரக்டர் ஜெனரல் பி. துரை நேற்று (செவ்வாய்) விமான மூலம் இராமநாதபுரம் சென்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட ஏற்பாடாகியிருந்தது. [ஒ-எ]

## நாளை யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், பெப். 21
ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தை சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகள் நாளை யாழ்ப்பாணம் விஜயம்செய்யவிருக்கிறார்கள்.

ஜெனிவாவில் இருந்து சிரேஷ்ட மதிப்பீட்டு அதிகாரி திரு, கிளாயஸ் வோல்ட், தென்னாசியாவுக்கானவிசேட அதிகாரி நியூடிணா ஆகியோரும் கொழும்பு தலைமையக திட்டமிடல் அதிகாரி பௌதிஸ்டாவும் விஜயம் செய்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் இந்த அமைப்பு மேற்கொண்ட வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்யவே இவர்கள் வருகை தருகிறார்கள்.

மூன்று நாட்கள்இங்கு தங்கியிருக்கும் இவர்கள் முறைசாராக்கல்விஅபிவிருத்திபற்றியும், வீடமைப்புத் திட்டங்கள் பற்றியும் ஆராய்வார்கள்.

நாளை பகல் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் முறைசாராக் கல்விக்கான உபகரணங்களை வழங்கும் வைபவத்திலும் இவர்கள் கலந்துகொள்வார்கள். (இ-3)

## இன்று மௌன ஊர்வலம்

சாவகச்சேரிப் பகுதியில் இன்று மௌன ஊர்வலம் ஒன்று நடைபெற உள்ளது.

இதுவரை காலமும் நடந்த மோதல்களில் மரணமான தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே இந்த மௌன ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊர்வலத்தை மாணவர் ஒருங்கிணைப்பு குழு ஏற்பாடு செய்துள்ளது.

இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்பட உள்ள மௌன ஊர்வலம் சாவகச்சேரி வரை நடைபெறும். (அ-9)

## உ. வே. சா. வின் பிறந்ததினம்

பழந்தமிழ் இலக்கிய நூல்களின் ஓலைச் சுவடிகளைக் கண்டெடுத்து, பதிப்பித்து, நூல் வடிவில் கொண்டுவந்து தமிழுக்கு அருந்தொண்டாற்றிய டாக்டர் உ. வே. சாமிநாதஐயரின் 136ஆவது பிறந்த தினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. (எ)

## கொழும்பில் கைதானோரை விடுவிக்குமாறு வற்புறுத்தல்!

கொழும்பு, பெப் 21
கொழும்பில் திடீரென பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி தமிழீழ விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

அவர்களின் வற்புறுத்தலை அடுத்து கைதான இளைஞர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கைதான இளைஞர்களில் பெரும்பாலானோர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரட்ணம் யோகி ஆகியோர் இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் மூன்று தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்,

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்கும் தங்களுக்கும் எந்தவித தொடர்புமில்லை என்று தெரிவித்த விடுதலைப்புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் இது தொடர்பாக சில குழுக்கள் தங்களுக்கு எதிரான— தவறான— பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் சொன்னார். (அ-உ)

## படையினர் தங்கியிருந்த கட்டடங்கள் உரியவர்களிடம்

கொழும்பு, பெப் 21
வடக்கு, கிழக்குப் பகுதியில் இலங்கை மற்றும் இந்தியப் படைகளினால் பொறுப்பேற்று அவர்கள் தங்கியிருந்த பாடசாலை, ஆஸ்பத்திரி கட்டடங்களும், பொது ஸ்தாபனங்களின் கட்டடங்களும் மீள அந்தந்த நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும்.

இலங்கை அரசாங்கம் இதற்கான உறுதிமொழியை வழங்கியிருக்கிறது.

இந்தக் கட்டடங்களிலிருந்து படையினரை அகற்றி, அவற்றை உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசு [illegible] பேச்சுக்களின் போது வற்புறுத்தி வந்தனர் [illegible] பதற்கான உறுதிமொழியை இலங்கை அரசு வழங்கியிருக்கிறது என்றும் தெரிகிறது. [உ]

## டாக்டர்கள் 61 பேர் சித்தி

யாழ்ப்பாணம், பெப் 21
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலிருந்து மொத்தம் 61 மாணவர்கள் எம். பி. பீ. எஸ். இறுதி ஆண்டு பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த பிரஸ்தாப இறுதிப் பரீட்சையில் இரண்டு பேர் முதலாம் வகுப்பிலும் 24 பேர் இரண்டாம் வகுப்பிலும் மிகுதி 35 பேர் மூன்றாம் வகுப்பிலும் சித்தி அடைந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காந்திமதி நவரத்தினம்

காரைநகர், வலந்தலை பழைய கண்டியைச் சேர்ந்த திருமதி காந்திமதி நவரத்தினம் 17 – 02 – 90 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் நவரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்ற இளையதம்பியின் மகளும், செல்வநாயகி, விஜயரத்தினம், புஸ்பநாயகி, பத்மநாயகி, கணேசரத்தினம், பூங்கோதைநாயகி ஆகியோரின் தாயாரும், செல்வரத்தினம் (மட்டக்களப்பு) பார்மல் (ஜேர்மனி), வைத்தியநாதன் (சுவீடன்) ராஜேந்திரா (சுவீடன்), ஆனந்த கௌரி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், றமணன், சுடேஸ், நளினி, பவானி, யூலியான், ஆகியோரின் பேத்தியும் காலஞ் சென்ற இராசநாயகம் (மலேசியா) காலஞ் சென்ற புவிநாயகம் (மலேசியா), மருணாளினி ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பூங்கோதைநாயகி.
வலந்தலை,
காரைநகர். [2599]

## திருமதி கந்தையா பொன்னம்மா

[காலம் சென்ற மலேயன் பென்சனர் அல்லியர் சின்னையா கந்தையா அவர்களின் அன்புப் பாரியார்]

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா பொன்னம்மா அவர்கள் 20-02-1990 இல் சிவபதமடைந்துள்ளார்.

இவர் கோண்டாவில் காலம் சென்ற நாகப்பர் ஆறுப்பிள்ளையினதும், ஆறுப்பிள்ளை செல்லாச்சியினதும் மகளும், காலம் சென்ற செல்லத்துரை, சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), ஆச்சிப்பிள்ளை வயித்திலிங்கம் ஆகியோரின் சகோதரியும், இரத்தினேஸ்வரி, சரஸ்வதி, திருநாவுக்கரசு (யாழ். மாநகர சபை, தீயணைப்புச் சேவைப் பொறுப்பாளர்), இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவநாதன் (இளைப்பாறிய உணவு இலாகா களஞ்சியப் பொறுப்பாளர்), இரத்தினசிங்கம் (இளைப்பாறிய பதில் உதவி ஆணையாளர், மோட்டார் வாகன இலாகா), திருமதி புஸ்பராணி திருநாவுக்கரசு, பாலசுப்பிரமணியம் (சிரேஷ்ட முகாமையாளர், மக்கள் வங்கி, சர்வதேச பிரிவு, கொழும்பு) இவர்களின் அன்பு மாமியாரும், சிவகுமார், சாந்தகுமார் (அமெரிக்கா), சுகுமார் (பரியோவான் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவன்), றஞ்சினி யெபநேசன் (இந்தியன் வங்கி, கொழும்பு), கப்டன் ரவீந்திரன், ரவிச்சந்திரன் (அமெரிக்கா), முகுந்தன் (பரியோவான் கல்லூரி), யாழினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வத்சலா பகிரதன் (அவுஸ்திரேலியா), முரளீதரன் (வெஸ்லி கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் 21-02-1990 புதன்கிழமை காலை 11-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
கந்தையா திருநாவுக்கரசு
'இரத்தின கிரி'
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [2608]

## திரு. கருணானந்தன் சந்திரமௌலி

திரு. சந்திரமௌலி (பொறியியலாளர், Nixdorf Ltd., Colombo) 19-2-90 அன்று காலமானார். இவர் முன்னைநாள் யாழ் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராவார். அன்னார் சிவகாமியின் அன்புக் கணவரும், நீராவியடி Dr. கருணானந்தன் தையல்நாயகி (குஞ்சு) தம்பதிகளின் அருமைப் புதல்வனும், திருநெல்வேலி சட்டத்தரணி பொன்னையா, நாகேஸ்வரி (முன்னைநாள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி உப-அதிபர்) தம்பதிகளின் மருமகனும், நளாயினி (அமெரிக்கா), பாலகுமார் (லண்டன்), திருமகள் (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரரும், திரு. குணநாயகம் (அமெரிக்கா), சித்ரா (லண்டன்), திருமதிகள் ஆனந்தி-ஈஸ்வரன், வாசுகி-கைலைநாதன், வாகீசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 26, சிவகுருநாதன் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் 22-2-90 வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.
(11856) தகவல்: ஏ. கருணானந்தன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 – 02 – 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.